FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017**
**Term Examination, November - 2017**

| தரம் :- 13 (2018) | நாடகமும் அரங்கியலும் I | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

01. "நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும் பழக்க வழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடியாகும்" எனக் கூறியவர்
1) பரத முனிவர் 2) அலடைஸ் நிக்கொல் 3) அரிஸ்ரோட்டில்
4) பேனாட்ஷோ 5) அபிநவகுப்தர் ( )

02. 'அரங்கு' பற்றிய பின்வரும் கூற்றுகளில் மிகவும் பொருத்தமான கூற்று
1) அரங்கு என்பது பார்க்குமிடம்
2) அரங்கு என்பது 'ஆற்றுகை செயல்களின்' தொகுதி
3) அரங்கு ஒரு கட்டடம்
4) அரங்கு என்பது நாடகமாகும்
5) அரங்கு கலைக்கூடம் ( )

03. அரிஸ்ரோட்டில் நாடகத்தின் முதன்மையான அம்சமாகக் குறிப்பிடுவது
1) பாத்திரம் 2) சொல்லாட்சி 3) நாடகச் செயல்
4) பெருங்கட்சி 5) சிந்தனை ( )

04. 'கதைப்பின்னல்' என்பது
1) சம்பவங்களின் சங்கிலித்தொடர் 2) கதையின் சுருக்கம் 3) நாடகத்தின் பாடு பொருள்
4) கதையின் விரிவாக்கம் 5) நாடகப்பகுதிகள் ( )

05. 'நாடக நெறியாள்கை' தொடர்பான பொருத்தமற்ற கூற்று
1) நாடக எழுத்துருவுக்கு வியாக்கியானம் கொடுத்தல்
2) அரங்குசார் மூலகங்களை ஒன்றிணைத்தல்
3) எழுத்துருவை, உயிரோட்டமான படைப்பாக 'வெளியில்' படைத்தல்
4) நாடகத்துடன் தொடர்பான செயற்பாடுகள் அனைத்தையும் முதன்மை செய்தல்
5) புதிய அர்த்தப்பாடுகளை அரங்க வெளியில் தோற்றுவித்தல் ( )

06. 'கூத்துக்களில்' காட்சி விதானிப்பு செய்யப்படாததற்குக் காரணம்

1) கூத்தில் காட்சிகளுக்கு முக்கியத்துவமில்லை
2) ஆடுவதற்கு காட்சி விதானிப்பு இடையூறாக இருக்கும்
3) கூத்தின் அரங்கவெளி வட்டமானதாகையால் காட்சிகளை அமைக்க முடியாது
4) பார்ப்போரின் கற்பனைக்கு இடமற்றுப்போகுமென்பதால்
5) கூத்து ஒரு மோடியுற்ற வடிவமென்பதனால் ( )

07. 'புரோசீனியம் வில்வளைவு' அரங்கு தோற்றம் பெற்ற நாடு,

1) பிரான்ஸ் 2) யேர்மனி 3) சீனா 4) ஜப்பான் 5) இத்தாலி ( )

08. சாத்விகாபிநயத்தில் வருகின்ற 'ஸ்வேத' என்பதன் பொருள்

1) உடல் நிலையாக நிற்றல் 2) உடல் நடுங்குதல் 3) வியர்த்தல்
4) கண்ணீர் சொரிதல் 5) மயங்குதல் ( )

09. பின்வருவனவற்றில் 'லோகதர்மி'க்குரிய கூற்று

1) இயல்பான அபிநயங்களைக் கொண்டது 2) லலிதம் கலந்த அசைவுகளையுடையது
3) குறியீடுகளினால் சித்திரிக்கப்படும் 4) இயல்பற்ற நடத்தைகளுடையது
5) ஆங்கிகாபிநயத்தினை முதன்மைப்படுத்துவது ( )

10. சமஸ்கிருத நாடகமரபில் 'நாடக தலைவனின் வெற்றிக்கு வேறொருவன் துணைபுரிவதாக கொள்ளப்படும் வரலாறு பின்வருமாறு அழைக்கப்படுகின்றது

1) பீஜ 2) பிந்து 3) பதகா 4) பிரகரி 5) கார்ய ( )

11. சாகுந்தலம் நாடகத்தில் கணையாளி கிடைக்கும் சந்தர்ப்பம் ஐவகை சந்திகளில் எதனைக்காட்டுகின்றது

1) யத்தன 2) ஆரம்ப 3) பலாகம் 4) பிராரப்தி 5) நியதாப்தி ( )

12. அரங்கில் 'பார்ப்போர்' உணர்வுடன் ஒன்றிக்காது அறிவு பூர்வமாக சிந்திக்க வேண்டும்' என கூறியவர்.

1) அரிஸ்ரோட்டில் 2) பிரக்ட் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
4) குறொட்டோவஸ்கி 5) அன்ரோ அன்ரோயின் ( )

13. தனது நாடகங்களை சமூக பிரச்சனைக்கான பிரயோகக் கருவியாக பயன்படுத்தியவர்

1) பிரக்ட் 2) மேய ஹோல்ட் 3) பீற்றர் புறூக்
4) அகஸ்தோ போவால் 5) சாமுவேல் பெக்கட் ( )

14. அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் 'ஹமாசியா' என்பது

1) உணர்ச்சி வெளிக்கொணர்கை 2) பாடுகளில் இருந்து தூய்மை பெறல்
3) அவலத்தவறு 4) குடற்பேதி 5) உணர்ச்சிச் செப்பம் ( )

The National e-learning Portal for The General Education

15. பின்வருவனவற்றில் 'வார்சிகாபிநயத்துடன்' தொடர்புபடாத படைப்பு
1) ஊமம் 2) கூத்து 3) வகிபாகமேற்றல்
4) புதிதளித்தல் 5) இசை நாடகம் ( )

16. பரதர் குறிப்பிடும் 'ரஸம்' களின் எண்ணிக்கை
1) 9 2) 5 3) 10 4) 8 5) 11 ( )

17. சமஸ்கிருத அரங்க மரபில் 'அனுகரண' என்பது குறிப்பது
1) உபரூபகம் 2) சாத்வீகம் 3) ஊமம்
4) போலப்பாவனை செய்தல் 5) முகபாவம் ( )

18. உணர்ச்சிகளின் வெளிப்பாட்டினை பரதர் 'ரஸம்' என்கின்றார். அதனை தொல்காப்பியர் எவ்வாறு கூறுகின்றார்.
1) கதாசிஸ் 2) அனுபாவம் 3) சுவை 4) கழிவிரக்கம் 5) மெய்ப்பாடு
( )

19. ஏழு மலட்டு இராணிகளை பிரதானமான பத்திரங்களாக கொண்ட சிங்களச்சடங்கு
1) சன்னியக்கும 2) ரட்டயக்கும 3) கோலம
4) தொவில் 5) பகன்மடுவ ( )

20. 'சூரன்போர்' சடங்குடன் தொடர்புபடாத பாத்திரம்
1) வீரவாகுத்தேவர் 2) தாரகாசுரன் 3) கஜமுகாசுரன்
4) நாரதர் 5) பானுகோபன் ( )

21. மேடையை 'வட்டமாக சுற்றிவரல்' தூரதேசம் பயணமாதல் என, குறிப்புணர்த்தும் நாடகமரபு
1) கூத்து மரபு 2) நாட்டிய சாஸ்திர மரபு 3) இசைநாடக மரபு
4) யதார்த்த நாடக மரபு 5) 'பலே' நாடக மரபு ( )

22. 'மானம்பூ' சடங்கில் இடம்பெறும் பிரதான பாத்திரங்கள்
1) சூரபத்மன், முருகன் 2) பஞ்சபாண்டவர், திரௌபதி 3) கஜமுகாசுரன், முருகன்
4) கம்சன் கண்ணன் 5) மகிடாசுரன், மகிசவர்த்தினி ( )

23. பின்வரும் கூத்து மரபுகளுள்
A. மட்டக்களப்பு வடமோடி B. மட்டக்களப்பு தென்மோடி C. யாழ்ப்பாண தென்மோடி
D. மன்னார் வாசாப்பு E. வன்னி கோவலன் கூத்து F. யாழ்ப்பாண வடமோடி
'வட்டக்களரி'யை தமது பிரதான அரங்க வெளியாக தற்போதும் பயன்படுத்தும் கூத்து மரபுகள்
1) A C E F 2) C D E F 3) A B E F 4) A B C D 5) B C E F ( )

24. நாடக எழுத்துரு வொன்றில், நடிகன் 'பார்ப்போரை' விளித்து பேசும் உரையாடல்.
1) புறச்சொல் எனப்படும் 2) ஆகாய கிளர்த்தல் எனப்படும்
3) தனிமொழி எனப்படும் 4) தன்னுரை எனப்படும்
5) அகமொழி எனப்படும் ( )

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

25. பின்வருவனவற்றில் 'பாஸ்கு' நாடகமரபினை நிகழ்த்துவதில் உலகப்புகழ் பெற்றதான பிரதேசம்

1) அமெரிக்காவின், 'நியூயோர்க்' 2) பிரான்சின், 'பரிஸ்'

3) இத்தாலியின் 'பலர்மோ' 4) யேர்மனியில் 'ஓபரமாகு

5) இலங்கையின் 'நீர்கொழும்பு' ( )

26. 'சிங்கள நாட்டார் நாடகம்' (The Sinhalese folk play) என்னும் ஆய்வு நூலின் ஆசிரியர்

1) ஜோன் டி சில்வா 2) எதிரி வீர சரச்சந்திரா 3) சாள்ஸ்டயஸ்

4) ஹென்றி ஜெயசேனா 5) E. F. C லூடோவைக் ( )

27. கூத்துக்களில் 'தாளப்பிரமாணத்துடன்' பாடப்படுகின்ற இறைவணக்க பாடல் பின்வருமாறு அழைக்கப்பெறுகின்றது

1) தோடயம் 2) விருத்தம் 3) வெண்பா 4) தேவாரம் 5) மங்களம் ( )

28. கூத்து மரபில் 'வேஷங்கட்டுதல்' என குறிப்பிடப்படுவது

1) போலச் செய்தல் 2) நடித்தல் 3) ஒப்பனை செய்தல்

4) பாத்திரமேற்றல் 5) வேட உடை தரித்தல் ( )

29. இசை நாடக மரபில், 'சோக' உணர்வினை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பெறும் முக்கிய இராகங்களிலொன்று

1) கல்யாணி 2) பூபாளம் 3) மோகனம் 4) முகாரி 5) சங்கராபரணம் ( )

30. 'யூலிய சீசர்' நாடகத்தில் "இதோ புழுதிக்கும் கீழான பாம்பேயின் சிலைக்கு கீழ் குருதி கொட்டிக்கிடக்கும் சீசர், இனிவரும் நாடகங்களிலும் நடிப்பின் பொருட்டு எத்தனை முறை செங்குருதி வடிக்கப்போகின்றானோ" என்ற கூற்றினை கூறிய பாத்திரம்

1) அன்ரோனியோ 2) புருட்டஸ் 3) காசியஸ் 4) கஸ்கா 5) சின்னா ( )

31. அபத்த நாடக மரபு பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று

1) மனித மனங்களின் விரக்தி நிலையில் தோன்றியது

2) உரையாடல்களில் 'தர்க்க' நிலைத்தொடர்பு அற்றுக்காணப்படும்

3) உலக யுத்தங்களுக்குப்பின் தோன்றியது

4) தெளிவான முடிவினைக் கொண்டு காணப்படும்

5) பிரான்சில் இது அதிக செல்வாக்குப் பெற்றது ( )

32. "ஒப்பேரா" வடிவங்களின் தாயகங்கள்

1) பிரான்ஸ், யேர்மனி 2) சீனா, பிரித்தானியா 3) சீனா, இத்தாலி

4) கிரேக்கம், உரோம் 5) பிரான்ஸ், ஸ்பெயின் ( )

33. 'குரவை' என்னும் ஆட்ட முறையின் மிகப் பிரதானமான பண்பு

1) ஆணும் பெண்ணும் இணைந்து ஆடுவது 2) பெண்கள் மட்டும் ஆடுவது

3) வட்டமாக கைகோர்த்து ஆடுவது 4) 'குரலை' ஒலி எழுப்புவது

5) நீராடிய பின் ஆடுவது ( )

34. பின்வரும் பணிகளில்

A – நடிகரைத் தெரிதல் B – நிதி மூலகங்களை தேடுதல்
C – வியாக்கியானம் செய்தல் D – மேடையேற்ற ஒழுங்குகளை செய்தல்
E – ஒத்திகை நடத்துதல் F – நாடகத்துக்கான அனுமதி பெறுதல்

நெறியாளனுக்குரிய பணிகள்

1) A B C 2) A C E 3) A C D 4) C E F 5) A D F ( )

35. சொக்கரி நாடகத்தில் பாத்திரங்களை அறிமுகம் செய்பவர்

1) கட்டிய காரன் 2) குருநான்சே 3) பொத்தே குரு
4) காரிய கரவணரால 5) விகடகவி ( )

36. ஒத்தெல்லோ நாடகத்தில் "ஒருவருமில்லை இக் கொலையை நானே இளைத்துக் கொண்டேன் இன்றேன்" எனக் கூறும் பாத்திரம்

1) ரோட்டிறிக்கோ 2) ஒத்தெல்லோ 3) கசியோ
4) டெஸ்ரிமோனா 5) எமிலியா ( )

37. அருகில் உள்ள படத்தில் காணப்படும் நாடக வடிவம்



1) வயங்குலிற் 2) ஒப்பேரா 3) பீக்கிங் ஒப்பேரா
4) கபுகி 5) பலே ( )

38. இந்நாடகக் காட்சி இடம்பெறும் நாடகம்



1) அன்ரிக்கனி 2) ஒத்தெல்லோ
3) யூலியசீசர் 4) வெண்கட்டி வட்டம்
5) அன்னத்தடாகம் ( )

39. இப்படத்தில் காணப்படும் உடையமைப்பு



1) வடமோடிக்குரியது 2) தென்மோடிக்குரியது
3) கோவலன் கூத்துக்குரியது 4) தெருக்கூத்துக்குரியது
5) கதகளிக்குரியது ( )

40. இப்படத்தில் காணப்படும் அரங்கவெளி



1) கிரேக்கத்திற்குரியது 2) உரோமுக்குரியது
3) இங்கிலாந்துக்குரியது 4) இந்தியாவுக்குரியது
5) எகிப்துக்குரியது ( )

(1X40=40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி II

❖ பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி A

*01.*

i) ஆற்றுகைக் கலைகளுக்குரிய முக்கிய பண்புகளை முன்வைக்குக? *(3 புள்ளிகள்)*

ii) 'ஆற்றுகை' – 'நடித்தல்' ஆகிய இரு எண்ணக்கருக்களுக்குமான ஒற்றுமை வேற்றுமையை ஆராய்க? *(5 புள்ளிகள்)*

iii) நாடகம் ஒரு தனிக்கலையாகவும், கூட்டுக்கலையாகவும் இருக்குமென்பதனை நிறுவுக. *(7 புள்ளிகள்)*

*02.*

i) 'அரங்க வெளி' என்பதன் கருத்தினை முன்வைக்குக? *(3 புள்ளிகள்)*

ii) பின்வரும் அரங்க வெளிகளின் 'அளிக்கை முறை', ஆற்றுவோர் பார்ப்போர் ஊடாட்டம், என்பவற்றை விளக்குக.
அ) காமன் பொட்டல்
ஆ) வட்டக்களரி
இ) படச்சட்ட மேடை *(3X4=12 புள்ளிகள்)*

*03.* நாடகக் கலையின், இன்றியமையாத கூறுகளில் 'உரையாடலும்' முக்கியத்துவம் பெறுகின்றது. பின்வரும் நாடக வடிவங்களில் உரையாடல்கள் அமையும் பாங்கினை ஒப்பிட்டு நோக்குக.

i) யதார்த்த நாடகம்
ii) இசை நாடகம்
iii) வானொலி நாடகம் *(3X5=15 புள்ளிகள்)*

## பகுதி B

*04.*

i) கிரேக்கத்தின் 'அவலச்சுவை' நாடகத்தின் பிரதான எண்ணக்கருக்களை விளக்குக? *(6 புள்ளிகள்)*

ii) பின்வருவோர் அவலச்சுவை நாடகத்தில் ஏற்படுத்திய பங்களிப்புக்களை எழுதுக?
அ) ஏஸ்கிலஸ் ஆ) சோபோகிளிஸ் இ) யூரிப்பிடீஸ் *(3X3= 9 புள்ளிகள்)*

*05.*

i) இந்திய அரங்கமரபில் பேசப்படும் 'மார்க்க' 'தேசி' பற்றி சுருக்கமாக விளக்குக. *(5 புள்ளிகள்)*

ii) அவ்விரு முறைமைகளையும், 'சாகுந்தலம்' 'அலங்கார ரூபன்' நாடக பாடங்களுடாக விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

*06.* பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றுக்கு சிறு குறிப்பு தருக?

i) 'அரங்கில் மருட்கை'
ii) 'பரதரின் ரஸக் கொள்கை'
iii) 'கூத்தின் எடுத்துரைப்பு முறைமை'
iv) அரிஸ்ரோட்டில் கூறும் 'கதாசிஸ்' *(3X5=15 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
# Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | நாடகமும் அரங்கியலும் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் *1* தொடக்கம் *40* வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

01. 'அன்ரிக்கனி' நாடகத்தில் அரங்கில் காட்டப்படாத காட்சிகளை எழுத்துரைக்கும் பாத்திரங்கள்
1) தைரீரியஸ், ஏமன் 2) தூதுவன், காவலாளி 3) கோரஸ், தூதுவன்
4) இயூரிடிசி, காவலாளி 5) இசுமெனி, கிரையோன் ( )

02. காளிதாசரின் அபிக்ஞான சாகுந்தலம் நாடகத்தின் மூலக்கதை அமைந்துள்ள இலக்கியம்
1) கந்த புராணம் 2) சிவபுராணம் 3) இராமாயணம்
4) மகாபாரதம் 5) சீவக சிந்தாமணி ( )

03. பின்வருவோரில் அபத்தவாத நாடக ஆசிரியர் அல்லாதவர்
1) ஹென்றிக் இப்ஸன் 2) இயூஜின் அயனெஸ்கோ 3) ஜெனே
4) சாமுவேல் பெக்கட் 5) பெற்றோல்ட் பிரக்ட் ( )

04. 'அபசுரம்' நாடகத்தினை முதன் முதலாக தயாரித்த நிறுவனம்
1) நாடக அரங்க கல்லூரி 2) நடிகர் ஒன்றியம் 3) எங்கள் குழு
4) கூத்தாடிகள் குழு 5) அம்பலத்தாடிகள் குழு ( )

05. 'ஒத்தெல்லோ' நாடகத்தில் காணப்படாத அம்சம்
1) காதல் நம்பிக்கை 2) உன்னத காமம், துரோகம்
3) பொறாமை, தூயஅன்பு 4) வருவதுரைத்தல், ஊழ்வினை
4) சந்தேகம், சதித்திட்டம் ( )

06. 'ஒத்தெல்லோ' நாடகத்தின் பிரதான கதைக்களங்கள்
1) வெனிஸ், ரோம் 2) சைப்பிரஸ், துருக்கி 3) வெனிஸ், சைப்பிரஸ்
4) வெனிஸ், தேம்ஸ் 5) வெனிஸ், பரிஸ் ( )

07. வேத்தியல், பொதுவியல் என்பன பற்றி எடுத்துரைக்கும் நூல்
1) தொல்காப்பியம் 2) கலித்தொகை 3) பரிபாடல்
4) சிலப்பதிகாரம் 5) மணிமேகலை ( )

08. 'உலக நாடகதினம்' கொண்டாடப்படுவது
1) ஜனவரி 14 2) மார்ச் 8 3) மார்ச் 27 4) ஏப்ரல் 23 5) ஏப்ரல் 28 ( )

09. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சன்னியக்குமவின் செல்வாக்கைப் பெற்ற சிங்கள நாடகவடிவம்
1) நூர்தி 2) சொக்கரி 3) கோலம் 4) மினர்வா 5) நாடகம் ( )

10. 'கஜமுகாசுரன் போர்' என்னும் சடங்குநிலை ஆற்றுகை நிகழ்த்தப்படுகின்ற கோவில்கள்
1) விநாயகர் கோவில்கள் 2) சிவன் கோவில்கள் 3) முருகன் கோவில்கள்
4) அம்மன் கோவில்கள் 5) கிருஷ்ணர் கோவில்கள் ( )

11. 'கவிதை இயல்' என்ற நூலின் ஆசிரியர்
1) இப்சன் 2) மேயஹோல்ட் 3) அரிஸ்ரோட்டில்
4) ஸ்ரனிஸ்லவஸ்கி 5) சோபோகிளிஸ் ( )

12. 'அறிவு கலை, விஞ்ஞானம், நுட்பம் எதுவானாலும் அது நாடகத்தில் அடங்கவில்லையோ அதற்கு அப்பெயரை இடுவதில் அர்த்தமில்லை' எனக்குறிப்பிட்டவர்
1) அரிஸ்ரோட்டில் 2) பரதமுனிவர் 3) அபிநவகுப்தர்
4) பேர்னாட் ஷோ 5) கொணிக்மன் ( )

13. 'கொகேசியன் சோக் சேக்கிள்' (வெண்கட்டி வட்டம்) என்ற நாடகத்தினை எழுதியவர்.
1) பிரக்ட் 2) இப்ஸன் 3) ம.சண்முகலிங்கம்
4) பராக்கிரம நிரியல்ல 5) அன்ரன் செகோவ் ( )

14. பாண்டு வாச தேவ மன்னனுடன் தொடர்புடைய, ஜதீகத்தினடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள சடங்கு நிலை ஆற்றுகை
1) சன்னியக்கும 2) ஹொகம்ப ஹங்காரிய 3) ரட்டயக்கும
4) சொக்கரி 5) கறாயக்கும ( )

15. இசை நாடக மரபினூடாக அறிமுகமாகிய பாத்திரம்
1) புலசந்தோர் 2) விகடகவி 3) கட்டியகாரன்
4) காரிய கரவண ரால 5) பபூன் ( )

16. சங்ககால கூத்தர் குழாமில் இடம்பெற்ற 'பெண் கூத்தர்'
1) சதுரி 2) கோடியர் 3) விறலியர் 4) வயிரியர் 5) பாணர் ( )

17. அன்ரிக்கனி நாடகத்தில் வருகின்ற "புதைக்கப்படாத கொடும் நாயும் கழுகும் அருந்த இன்று நாதியற்றுப்பட்ட பிணத்தை அவள் பக்தியுடன் நல்லடக்கம் செய்து விட்டாள்" என்ற உரையாடல் பேசப்பட்டது
1) இசுமெனியால் 2) கிரையோனால் 3) ஏமனால்
4) இயூரிடிசியால் 5) காவலாளியினால் ( )

18. ஒத்தெல்லோ நாடகத்தில் வருகின்ற "இந்த விளக்கணைந்தால் மீண்டும் நான் ஏற்றிடலாம் அந்த விளக்கணைந்தால் எப்படித்தான் ஏற்றுவது" என்ற உரையாடலுக்குரிய கதாபாத்திரம்

1) டெஸ்ரி மோனா 2) ஒத்தெல்லோ 3) எமிலியா
4) இயாகோ 5) பிரபான்சியோ ( )

19. அரங்கின் பின்வரும் மூலகங்களில்

A – நடிகன் B – வேட உடை C – ஒப்பனை D - இசை
E – காட்சிவிதானிப்பு F – ஒலி G – ஒளி H – பார்ப்போர்

கட்புல ரீதியாக ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூலகங்கள்

1) A D F H 2) A B C E 3) B C D G 4) D E F G 5) A B D H ( )

20. பின்வருவனவற்றில் ஈழத்தில் இருந்து வெளிவராத அரங்கியல் சஞ்சிகை

1) அரங்கம் 2) நாடகவெளி 3) ஆற்றுகை
4) மெய்ப்பாடு 5) கூத்தரங்கம் ( )

21. தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் 'ஆடல் வல்லார்' ஆடல் நிகழ்த்திய களம் எப்பெயரில் வழங்கி வந்தது.

1) கூத்தரங்கு 2) களரி 3) கூத்தாட்டவைக்குழாம் 4) அம்பலம் 5) பண்ணை
( )

22. 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கன நூலை எழுதியவர்

1) சுவாமி விபுலானந்தர் 2) இ. சிவானந்தன் 3) மறை மலை அடிகள்
4) சூரிய நாராயண சாஸ்திரி 5) பேரா. இராமனுஜம் ( )

23. அபசுரம் நாடகத்தில் வரும் பின்வரும் உரையாடலுக்குரிய பாத்திரங்களை இனங்காண்க

A - இதுவும் எங்களுக்கு தெரியாதெண்டு நீங்கள் நினைக்க கூடாது.

B – ஏனெண்டால் உண்மையிலேயே பெறேக்கதான் தாய்மார் அழுகினம்

C – அழுகிற தெண்டால் சும்மா இலோசான காரியமெண்டு நீங்கள் நினைக்கப்படாது

ABC என்ற பாத்திரங்கள் முறையே

1) சிவாயர், அருளர் தியாகர் 2) அருளர் தியாகர் அருளர் 3) தியாகர், சிவாயர், அருளர்
4) அருளர், தியாகர், சிவாயர் 5) தியாகர் அருளர் தியாகர் ( )

24. பின்வருவனவற்றில் குரல் பயிற்சியாக அமையத்தக்க அரங்க விளையாட்டு

1) குருட்டு ஆட்டோ 2) ஆடும் வீடும் 3) பழக்கலவை
4) பொன் முட்டை 5) குலை குலையாய் முந்திரிக்காய் ( )

25. 'அரங்க விளையாட்டுக்கள்' பற்றிய பொருத்தமற்ற கூற்று

1) நடிப்புக்கான பயிற்சியாக அமைபவை
2) வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் விளையாட்டுக்களாக இருக்கும்
3) ஈடுபடுவோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்
4) வெட்கம், கூச்சம் என்பவற்றை அகற்றுவதற்கு உதவும்
5) குழுவாக சேர்ந்தியங்கச் செய்யும் ( )

26. நடிகர் நீண்ட நேரம் ‘உரையாடல்களை நிகழ்த்துவதற்கு’ காற்றை சேமித்து வைக்க உதவும் பகுதி

1) அடி வயிறு 2) நாசி 3) நெஞ்சு 4) தொண்டை 5) உச்சந்தலை ( )

27. பின்வருவனவற்றில் ‘பார்ப்போரின் பதிற்குறிகள்’ என்று கூறமுடியாதது

1) கை தட்டுதல் 2) அழுதல் 3) சிரித்தல்
4) ஒளிப்படம் பிடித்தல் 5) ‘வண்ஸ்’ மோர் கூறுதல் ( )

28. சிறுகதை ஒன்றிற்கும், நாடக எழுத்துரு வொன்றுக்கும் இடையிலான பொதுமையான அம்சமாக கூற முடியாதது

1) கதை 2) கதைப்பின்னல் 3) பாத்திரங்கள்
4) முரண் 5) உரையாடல்கள் ( )

29. ‘முறைமை’ நடிப்பு பற்றி கூறிய நெறியாளர்

1) மேயஹோல்ட் 2) ஸ்ரனிஸ்வங்கி 3) பீற்றர் புறூக்
4) அரிஸ்ரோட்டில் 5) அன்ரோ அன்ரோயின் ( )

30. உலகப்புகழ்பெற்ற ‘அன்னத்தடாகம்’ (Swan Lake) என்னும் நாடகம் மேடையேற்றப்பட்ட வடிவம்.

1) பலே 2) ஒப்பேரா 3) நோ 4) கபுகி 5) இவாங்குலிற் ( )

31. பின்வருவனவற்றில் பிரதானமாக ஒலி விளைவுகள் மூலமும் சொல் மூலமும் வெளிப்படுத்தப்படும் நாடக வடிவம்

1) வீதி நாடகம் 2) மேடை நாடகம் 3) வானொலி நாடகம்
4) தொலைக்காட்சி நாடகம் 5) ஊம நாடகம் ( )

32. நாடக காட்சி ஒன்றில் ஒரு நடிகன் பேசும் போது மற்றைய நடிகன்

1) குறுக்கே பேசாதிருக்க வேண்டும் 2) நினைவூட்டுனரை கவனிக்க வேண்டும்
3) பார்ப்போரை அவதானிக்க வேண்டும் 4) நெறியாளரைப் பார்க்க வேண்டும்
5) ஏற்ற பதிற்குறிகளை உடலால் காட்டுதல் வேண்டும் ( )

33. ஒரு ‘இசை நாடக’ நடிகனிடம் இருக்க வேண்டிய அவசியமான திறன்கள்

1) சங்கீத ஞானம், நடிப்புத்திறன் 2) சாரீரவளம், நடிப்புத்திறன்
3) இசை ஞானம், தாளசுத்தம் 4) பாடுந்திறன், ஆடுந்திறன்
5) பாடலாக்கும் திறன், நடிப்புத்திறன் ( )

34. ‘கட்டியகாரன்’ என்னும் பாத்திரம் முதன் முதலாக அறிமுகம் பெற்ற வடிவம்

1) ‘கூத்து’ வடிவம் 2) ‘இசை நாடக’ வடிவம் 3) ‘பள்ளு நாடக’ வடிவம்
4) ‘கதகளி’ வடிவம் 5) ‘குறவஞ்சி’ வடிவம் ( )

35. ‘அலங்கார ரூபன்’ நாடகம், அமையப்பெற்ற கூத்து வடிவம்

1) வடமோடிக் கூத்து 2) சிந்துநடைக் கூத்து 3) வடபாங்கு கூத்து
4) தென்மோடிக் கூத்து 5) தென்பாங்கு கூத்து ( )

36. ஈழத்தில் 'நகரும் அரங்குகளினூடாக தமிழ் சிங்கள கலைஞரை இணைத்து நாடகங்களை மேடையேற்றும் நிறுவனம்

1) மக்கள் களரி 2) திருமறைக்கலாமன்றம் 3) செயற்றிறன் அரங்க இயக்கம்
4) அரங்க ஆய்வுகூடம் 5) செம்முகம் அவைக்கற்றுகைக் குழு ( )

37. 'நாடக வழங்கு' என்னும் நூலை எழுதியவர்

1) காரை செ. சுந்தரம்பிள்ளை 2) ம. சண்முகலிங்கம் 3) இ. சிவானந்தன்
4) சி. மௌனகுரு 5) நீ. மரிய சேவியர் அடிகள் ( )

38. அருகிலுள்ள படத்தில் காணப்படும் பேராசிரியர்



1) பேரா. கா. சிவத்தம்பி 2) பேரா. சு. வித்தியானந்தன்
3) பேரா. சி. மௌனகுரு 4) பேரா. இராமனுஜம்
5) பேரா. எதிரிவீர சரச்சந்திரா

( )

39. பின்வரும் நாடகக்காட்சி அமையப் பெற்ற நாடகம்




1) ஒருபாவையின் வீடு 2) யூலிய சீசர்
3) செவ்விளக்கு 4) ஒத்தெல்லோ
5) அன்ரிக்கனி

( )

The National e-learning Portal for The General Education

40. 'அபத்த நாடகம்' பற்றிப் பேசப்படும் எழுத்தாளர்




1) யூஜின் அயனெஸ்கோ 2) நா. சுந்தரலிங்கம்
3) சாமுவேல் பெக்கட் 4) ஜெனே 5) பிரக்ட்

(1X40=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி A

*01.*

i) ‘சாகுந்தலம்’ நாடகத்தில் திருப்புனையாக அமையும் மூன்று சந்தர்ப்பங்களை தருக? *(3 புள்ளிகள்)*

ii) மேலே I இல் நீர் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றும் நாடக வளர்ச்சிப்போக்கில் ஏற்படுத்திய மாற்றங்களை விபரிக்குக. *(4 புள்ளிகள்)*

iii) சாகுந்தலம் நாடகத்துள் ‘பரதர்’ குறிப்பிடும் ரஸங்களின் வெளிப்பாட்டு சந்தர்ப்பங்களை இனங்காணுக? *(8 புள்ளிகள்)*

*02.*

i) அபசுரம் நாடகத்தில் வரும் பாத்திரங்களையும், அவர்களின் ‘சார்பு நிலைகளையும்’ எழுதுக? *(6 புள்ளிகள்)*

ii) அபசுரம் நாடகத்தினை முழுமையான ‘அபத்த’ நாடகமாக கொள்ள முடியுமா? ஆராய்க. *(9 புள்ளிகள்)*

*03.*

i) ‘ஒத்தெல்லோ’ நாடகத்தின் பிரதான மோதுகை யாது? *(3 புள்ளிகள்)*

ii) அன்றிக்கனி நாடகத்தின் பிரதான மோதுகையை எழுதுக? *(3 புள்ளிகள்)*

iii) ‘ஒத்தெல்லோ’ ‘அன்றிக்கனி’ ஆகிய இரண்டு ‘ரஜடி’ களுக்குமான ஒற்றுமை வேற்றுமையை ஆராய்க? *(9 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education

## பகுதி B

*04.*

i) இலங்கையில் பாரம்பரியமாக கூத்து பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிட்டு, அப்பிரதேசங்களில் ஆடப்படும் கூத்து வகைகளை பட்டியலிடுக? *(6 புள்ளிகள்)*

ii) ஏதாவதொரு பிரதேசத்தில் கூத்து பயிலப்படும் முறையை விபரித்து எழுதுக. *(9 புள்ளிகள்)*

*05.*

i) சடங்கு என்றால் என்ன? *(3 புள்ளிகள்)*

ii) சடங்கிலுள்ள, நாடக அம்சங்கள் எவை? *(5 புள்ளிகள்)*

iii) ஈழத்தில் பயில் நிலையிலுள்ள ஏதாவது சடங்கொன்றின் செயலமைப்பினை விபரிக்குக? *(7 புள்ளிகள்)*

*06.* பின்வருவனவற்றுள் ஏதாவது மூன்று விடயங்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

i) பலே

ii) ஒப்பேரா

iii) இசை நாடகம்

iv) நடன நாடகம்

v) வானொலி நாடகம்

*(3X5=15 புள்ளிகள்)*